# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 93/2023

## CNR.No.TNCB19000

Date:27.01.2025 PW1

| பெயர் | சுப்பம்மாள் | வயது | 75 |
|---|---|---|---|
| க/பெ | கந்தசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | கெண்டேபாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 27th January 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தம்பி தாக்கல் செய்த எதிர்வழக்குறைக்கு பதிலுரை தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. எனது தகப்பனார் ஈரன்ன கவுண்டரை 2 ஆம் பிரதிவாதிதான் பார்த்து வந்தார் என்றும் அவரது இறுதி காலம் வரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஈரன்ன கவுண்டர் 2 ஆம் பிரதிவாதி தங்கராஜ் என்பவரின் பெயருக்கு 05.08.2011 அன்று வழக்கு சொத்து முழுவதையும் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

எனது அப்பாவின் 16 ஆம் நாள் காரியத்தன்று ஈரன்ன கவுண்டரின் உடமைகளை அவரது வீட்டில் இருந்து எடுக்கும் போது அத்துடன் உயில் இருந்ததை உறவினர்கள் உட்பட அனைவருக்கும் தெரிந்தது என்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனத்தின் படி 2 ஆம் பிரதிவாதிதான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. உயிலைபற்றி தெரிந்தும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிரோடு இருக்கும் போதே எனக்கு அசையும் சொத்து வாங்கி கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல.

உயில் சாசனத்தின் படி 2 ஆம் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்தை அடைந்து அனுபவித்து வருகிறார் என்பதால் நானோ மற்ற பிரதிவாதிகளுக்கோ எவ்வித பாத்தியமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நானும் மற்ற பிரதிவாதிகளும் தாவா சொத்தின்

கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது முறையாக மதிப்பீடு செய்யவில்லை அதற்கான நீதிமன்ற கட்டணமும் கட்டவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலமே எழவில்லை இந்த தாவாவில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K. Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.